3. உரிமை மீறல் பிரச்சினை.

17—3—1990 ஆம் நாளன்று அ.இ.அ.தி.மு.க. வினர் வெளி நடப்புச் செய்தபிறகு, நிதிநிலை அறிக்கையை முதல்வர் வாசித்தபோது அவையில் எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் அமர்ந்திருப்பதாகத் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பப் பெற்றுள்ளது குறித்து—பேரவைத் தலை வரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *19—3—1990* அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தார் மீது கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்பினார்கள் :

''நிதிநிலை அறிக்கையை வாசிக்கும்போது, நாங்கள் வெளி நடப்புச் செய்திருக்கிறோம், எனவே வெளிநடப்புச் செய்திருக்கிற எங்களை சட்டமன்றத்திலே காட்டுவது என்பது சட்டமன்றத் தில் நடக்காத ஒன்றை நடந்ததாகக் காட்டுவது உரிமை மீறிய செயலாகும்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அன்று நான் இதுகுறித்துத் தொலைக்காட்சி நிலையத்தாருக்கு எழுதி விளக்கம் பெற்று எனது தீர்ப்பை அளிக்கிறேன் என்று கூறியிருந்தேன்.

சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் தனது *22—3—1990* ஆம் தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்கள் :

"There has been an unintentional mistake while transposing the shots of the Assembly scene taken before and after over the scene of presentation of the budget which is regretted" என்று குறிப் பிட்டுவிட்டு, "The linking of the clipping of Thiru S. R. Radha and Thiru Thirunavukkarasu with visuals of the budget presentation has happened by mistake and without any bad intention. However we regret very much for the mistake." என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

தொலைக்காட்சி நிலையத்தார் தங்களது தவற்றை ஏற்றுக் கொண்டு அதற்கு வருத்தமும் தெரிவித்துள்ளபடியால், இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்து விடலாம். இருப்பினும் தொலைக்காட்சி போன்ற பொது நிறுவனங்கள் பேரவையின் நிகழ்ச்சிகளை வெளியிடும்போது மிகுந்த கவனத்தோடு அவற்றை வெளியிடவேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.